www.tamilarangam.net


# பொதுமை

மலர். 2 இதழ். 5

அன்பளிப்பு ரூபாய் 2

20-04-85

வெளியீடு :

ஈழப்புரட்சி அமைப்பு

EROS

ஈழத்தில் 20-4-85 வெளியான இவ்விதழ் கடல் கடந்து வாழும் தோழர்களுக்காக, சென்னையில் மறுபதிப்புச் செய்யப்பட்டு 10-6-85 அன்று வெளியிடப்பட்டது.


## வடபகுதி தாக்குதல்கள் இடை நிறுத்தப்படுமா?

இந்தியத் தூதுவர் ரொமேஷ் பண்டாரியின் விஜயத்தின் உள்ளடக்கம் தற்போது படிப்படியாக வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. இதன் ஒரு முக்கிய அம்சமாக இன்று இந்திய - இலங்கை அரசியல் வட்டாரங்களில் பலமாக அடிப்பட்டு வரும் ''போர்நிறுத்தம்'' பற்றிய வேண்டுகோளை குறிப்பிடலாம். வடபகுதியை மையமாகக் கொண்டு வடபகுதி தாக்குதல்களிலேயே கண்ணும் கருத்துமாயிருந்த சில இயக்கங்கள் இனிவரும் சில மாதங்களுக்கு பாரிய தாக்குதல்களை தவிர்ப்பது பற்றி ஆலோசித்து வருகின்றன. இதற்கான நிர்ப்பந்தங்களும், அரசியற் பின்னணிகளும் மிகுந்த அவதானத்துக்குரியன.

83 கலவரத்தை அடுத்து இனப்பிரச்சனையைத் தீர்க்கவென இந்தியா, தூதுவர் மார்க்கமாக மேற்கொண்டு வந்த முயற்சிகளை ஜே. ஆர். கடந்த வருட இறுதியில் ஒரேயடியாக முறிக்க முனைந்திருந்தது எவருக்கும் தெரிந்ததே! கிராமசபை, மாவட்டசபை, மாகாணசபை, இரண்டாவது சபை என பலவாறுக ஜே. ஆர். நீட்டி முழங்கியபோது, பார்த்தசாரதி இச்சபைத் தீர்மானங்கள் அர்த்தமற்றது, என அபிப்பிராயம் தெரிவித்த கையோடு தான் இந்திய உறவை அறவே உதறி எறிய முற்பட்டார் ஜே. ஆர்.

இதனுல் தேக்கம் ஏற்பட்டு சில மாதங்களானதும், மன்னுரில் உருவாக்கப்பட்ட புதிய நெருக்கடிகள் ஒரு திருப்பத்தைக் கொடுத்திருந்தன.

### மன்னுர் சம்பவம்

ஜனவரியில் அடம்பன் பகுதியில் சில இளைஞர்கள் நான்கு சாதாரண சிங்களவர்களைக் கொலை செய்துவிட்டு, அவ்விடம் நோக்கி இராணுவம் வருமென்று காத்திருந்தனர். இவர்கள் நினைப்பிற்கு மாருக இராணுவம் வராது வேறு இடங்களில் கிராமவாசிகளைத் தாக்கியும், சித்திரவதை செய்தும், சுட்டுக் கொன்றும் அட்டூழியம் புரிந்தது. இதனைக்கண்டு இப்பகுதி மக்கள் கலக்கமுற்றிருக்கும்போது, பேசாலைக்கு சீருடை அணிந்து ஆயுதங்கள் சகிதம் சென்ற சுமார் 15 இளைஞர்கள், தாம் தாக்குதல் நடத்தப்போவதாக செய்தியைப் பரப்பியதும், அவ்விடத்துக் குடும்பங்கள் தமக்கு இராணுவத்தினரால் ஆபத்து வந்து விடப்போவதாக எண்ணிக் கொண்டு எல்லாத் தடைகளையும் தாண்டி இந்தியாவுக்குத் தப்பி ஓடத்தொடங்கினர். இவ்வாறு சென்றவர்களினதும் 83 கலவரத்தின் பின் ஏனைய பகுதிகளிலிருந்து சென்றவர்களினதும் மொத்தத் தொகை தற்சமயம் 85,000 பேரென இந்திய அறிக்கைகள் கூறுகின்றன.

### நெருக்கடியும் பேச்சு வார்த்தையும்

இவ்வகதிகளினுல் தமிழகத்தில் உருவான நெருக்கடி நிலைமை, இந்திய ஆலோசனைகளுக்கு மீண்டும் இலங்கை அடங்கி நடக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது. 'இந்தியாவுடன் இனிமேல் பேச்சில்லை' என்று கூறி முகத்தைத் திருப்பி வைத்திருந்த ஜே. ஆர். மீண்டும் பேச்சுவார்த்தைக்கு இசைய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டார்.

தவிர்க்கமுடியாத இந்தச் சூழ்நிலையில் ''நாம் பேச்சு வார்த்தைக்குத் தயார்; ஆனுல் பார்த்தசாரதியுடன் பேசத் தயாரில்லை'' என நிபந்தனையுடன் கூடிய இணக்கத்தை அரசாங்கம் தெரிவித்துக் கொண்டது.

செயலிழந்துள்ள கூட்டணியினருடன் பேசுவது, விடுதலை இயக்கங்களின் இராணுவ நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாது என்பதை உணர்ந்த நிலையில், கூட்டணியினரின் அன்புக்குப் பாத்திரமான பார்த்தசாரதியுடன் பேசமுடியாது என்றநோக்கிலேயே இவர்கள் இவ்வாறு நிபந்தனை விதித்திருந்தனர். இந்திய நிர்வாகம் உத்தியோக பூர்வமாக இதை மறுத்திருந்தாலும் பார்த்தசாரதிக்குப் பதில் ரொமேஷ் பண்டாரியையே இம்முறை பேச்சுக்கு அனுப்பிவைத்திருந்தது.

### பண்டாரியின் இருவிடயங்கள்

ரொமேஷ் பண்டாரியின் விஜயம் பிரதான இரு விடயங்களை மையப்படுத்தி அரசாங்கப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைத் திரட்டுவதாக இருந்தது. கூட்டணியினருடன் பேசிப் பயனில்லையெனில், இனி எவருடன் பேசுவது என்பது முதலாவது முக்கிய விடயம். விடுதலை இயக்கப்பிரதிநிதிகளுடன் பேசுவதற்குரிய சூழ்நிலையை எப்படி உருவாக்குவது என்பது இரண்டாவது விடயம்.

'விடுதலை இயக்கத் தலைவர்களுடனே அல்லது பிரதிநிதிகளுடனே பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கு அரசாங்கத் தரப்பில் விருப்பம் இருப்பது தற்போது அப்பட்டமாகி உள்ளது. ''தீவிரவாத தலைவர்களுடன் பேசத் தயார்; பொது மன்னிப்பு வழங்கத்தயார்; கைது செய்தோரை விடுவிக்கத் தயார்; இராணுவத்தை வாபஸ் வாங்கவும் தயார்'' என அடுத்தடுத்து அத்துலத் முதலியும், ஜே. ஆரும் அறிவித்து வருவது இதை உணர்த்துகிறது. ஆனுல் இவையனைத்துக்குமான முக்கிய நிபந்தனை போராளிகள் முதலில் ஆயுதங்களை கீழே போட வேண்டுமென்பதே!

இவ்வேண்டுகோளை வெறுமனே அறிவிப்பாக விட்டுவிடுவதால் மட்டும் கைகூடாதென்பது வெளிப்படை. இதற்கேற்ற ஆக்கப்பூர்வமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு, தற்போது பல முனைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### அமைதி நிலைமை

இதற்கான முதல் வேலைப்பாடாகவே திடீரென சில அறிஞர்கள் தோன்றி அறிக்கை ஒன்றை அண்மையில் விட்டிருந்தனர். 'மூன்று மாதங்களுக்கு இருதரப்பினரும் ஆயுதங்களை கீழே போடவேண்டும்' என இவர்கள்தெரிவித்துஆரம்ப அபிப்பிராயமொன்றை பரவ விட்டிருந்தனர்.

இதையடுத்து இப்பொழுதெல்லாம் வடக்குபகுதி இராணுவம் தனது கெடுபிடிகளை சுருட்டிவைத்து கொண்டு, சாந்த சொரூபிகளாக நடமாடத் தொடங்கியிருக்கின்றனர். இது அத்துலத் முதலியின் பாஷையில் இராணுவம் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டது என்று அர்த்தமாகலாம்!

அரசாங்கத்தின் இந்த புதிய 'நாடக வேடத்தை'க் காட்டி இயக்கங்களின் தாக்குதலை இடை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுக்கப் படலாம். இது எப்போது என்பதும் எவ்வளவு காலமென்பதும் இந்திய-இலங்கை பேச்சுவார்த்தையின் பின்பே வெளிவரச் சாத்தியமுண்டு.

## ''தமிழர் பிரதிநிதியாக எவருடன் பேசுவது?''


**ரொமேஷ் பண்டாரி கேள்வி**

## வடபகுதி தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போட்டால் பேசத்தயார்

**அத்துலத்முதலி**

## மூன்று மாதங்களுக்கு இருதரப்பினரும் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு பேச்சு வார்த்தைக்கு தயாராக வேண்டும்.

**அறிஞர்குழு வேண்டுகோள்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# செய்திகள்

## செங்கலடித் தாக்குதலில் 30-35 அதிரடிப் படையினர் மாண்டனர்!

### எஸ். ஏ. எஸ் மூலம் பிரித்தானியாவில் விசேட பயிற்சி பெற்ற S. I. வீரதுங்காவும் இதில் சிக்கினர்.

ஏப்ரல் 3ம் திகதியன்று செங்கலடி கொடுவாமடு வீதியில் அதிரடிப்படையினர் மீது நிகழ்த்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது 32—35 அதிரடிப்படையினைச் சார்ந்த பொலிஸார் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. இத்தாக்குதலின் போது தகவல் சொல்பவர்கள் ஐவரும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த இரு வாகனங்களும் முற்றுகச் சேதமாக்கப்பட்டன. தாக்குதலின் போது உயிர்தப்பிய சிலர் தொடர்ந்து வந்த துப்பாக்கி ரவைகளுக்குப் பலியாக்கப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களுள், இவ்வதிரடிப் படையினைத் தலைமை தாங்கிய வீரதுங்கா, பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பில் நடைபெற்று வந்த அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்கள், கெடுபிடிகள், கைதுசெய்யப்படுதல், கொலைகள் என்பனவற்றிற்கு இவ்வதிரடிப் படையினரே காரணமாக இருந்து வந்துள்ளனர். இவ்வதிரடிப் படையினைத் தலைமை தாங்கிய S. I. வீரதுங்கா உட்பட, ஐவர் லண்டனில் S. A. S. ஊடாக ஆறுமாத காலங்கள் விஷேட கமாண்டோ பயிற்சி பெற்றவர்களாகும். S. I. வீரதுங்காவே மட்டக்களப்பு நகரில் நடைபெற்று வந்த அடாவடித்தனங்களுக்கும், கற்பழிப்புக்களுக்கும், கொலைகளுக்கும் காரணகர்த்தாவாக விளங்கியவன். S. I. வீரதுங்காவை தேடி, அரசினல் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் முயற்சிகளைத் தொடர்ந்தும், செங்கலடிப்பிரதேசத்தில் முக்கால் மணிக்கு மேலாக நடாத்தப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்தும் இவரது சடலம் கிடந்த இடம் இரகசியமாக தொலை பேசி மூலம், அதிரடிப்படையினருக்கு தாக்குதலை மேற்கொண்டவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்தாக்குதலினை மேற்கொண்டவர்கள் எவ்வித இழப்புகளுமின்றி திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

□

## சேருவாவிலையில் மேலும் 150 சிங்கள குடிகள்:

### கங்கு வேலியிலும் கள்ளக் குடியேற்றத்துக்கு முயற்சி இஸ்லாமியரின் காணிகளும் பறிபோகின்றன.

மூதூரையடுத்த சேருவாவிலையில் அமைந்துள்ள புத்த விகாரையைச் சுற்றி 150 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இவர்கள் இவ்விகாரையின் தர்மகத்தாவும் முன்னுள் கைத்தொழில் அமைச்சருமான சிறில் மத்தியூவினல் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு குடும்பத்திற்கு ஒரு துப்பாக்கியும் மாதமொன்றுக்கு 5 ரவைகள் வீதமும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. அதேவேளை கிளிவெட்டியை அடுத்த கங்குவேலி என்னும் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 25 வீடுகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அநேக முஸ்லீம் மக்களின் விவசாயக் காணிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இக்கிராமம் 78ம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தின் போது முற்ருக எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

□

## திருகோணமலையில் விஷேட பயிற்சிகள்:

### புதிய முகாம்கள் அமைக்கவும் திட்டம்

திருகோணமலை கடற்படைத் தளத்திலும், துறை முகப் பகுதியிலும் கடற்படையினருக்கு விஷேட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட அதிவேக ரோந்துப் படகுகளில் இப்பயிற்சிகள் இடம் பெறுவதாகவும் இப்பயிற்சியில் இசுரேலியர்களே போதனசிரியர்களாக இருப்பதாகவும் தெரிகிறது.

இத்துடன் மூதூரில் அதிரடிப் பொலிஸார் நிரந்தர முகாமிட்டிருப்பதோடு கிளிவெட்டிப் பகுதியில் நிரந்தர இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கான ஆயத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையில் வாழ்பவனும் கலவரங்களுக்கு காரண கர்த்தாவாக விளங்குபவனுமான ''கிரிமாத்தயா'' என்றழைக்கப்படும் மீன் வியாபாரிக்கு சிறில் மத்தியூவின் ''சிங்கக் குட்டி'' இயக்கத்தினூடாக நவீனரக இயந்திரத் துப்பாக்கிகளும் கைக்குண்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

□

### காரைதீவு - அக்கரைப்பற்று

## இந்து - இஸ்லாமிய மோதலுக்கு பொலிசார் பின்னணி

### இதுவரை 12,000 பேர் அகதிகள்; 21 கோடி ரூபா நஷ்டம்

கடந்த வெள்ளிக்கிழமை (12-4-85) முதல் மட்டக்களப்பில் இந்து முஸ்லீம் கலவர மானது சுமார் 12,000 பேரினை அகதிகளாக்கியதுடன் பல உயிர்க் கொலைகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது. 1978ம் ஆண்டு வீசிய புயலின் பின்னரான மட்டக்களப்பின் தோற்றத்தை கலங்கவைக்குமளவிற்கு இன்றும் மட்டு நகர் காணப்படுகின்றது.

இக்கலவரங்களின் சூத்தரதாரிகளாக அரசின் அதிரடிப் படையினர் விளங்கும் அதே சமயம், பதுளைப்பகுதியிலிருந்து கூலிக்கு வரவழைக்கப்பட்ட குண்டர்களும் இணைந்து இக் கொடுமைகளைச் செய்துள்ளனர். கடந்த இரு நாட்களும் உண்மை நிலையினை விளக்கும் வகையிலான பல துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

ஈழப் போராளிகளுக்கு இச் சம்பவங்கள் இடம்பெற்ற சில முஸ்லீம் கிராமங்கள் வழங்கி வந்த ஆதரவினை ஒடுக்கும் வகையிலேயே இக் கலவரங்கள் திட்டமிடப்பட்டன. அதாவது மட்டக்களப்புப் பகுதிகளில் தமிழ்ப்போராளிகளை சுற்றி வளைக்கும் முயற்சிகளில் அரசு இறங்கிய சமயங்களிலெல்லாம் இசுலாமிய மக்கள் அளித்த பாதுகாப்பே அரசின் இம்மன முறிவுக்கு காரணமாகும்.

எனவே அரசின் இந்த திட்டமிட்ட நடவடிக்கை பற்றிய பின்னணி யாதென்று மக்கள் சரியாக இனங்கண்டு கொள்ள வேண்டிய கட்டாயம் இச்சமயத்தில் அவசியமாகும். முஸ்லீம்களை இந்துக்கள் போன்றும் இந்துக்களை முஸ்லீம்கள் போன்றும் தாக்கியதன் மூலமே இக்கலவரத்தினை உருவாக்கியுள்ளனர். இக்கலவரத்தினூடான இழப்பினை நேற்றுவரை 21கோடி ரூபாய் என அரசு மதிப்பிட்ட போதும் உண்மையில் இவ்விழப்புக்கள் மதிப்பிட முடியாத தொன்ருகும்.

□

## இலங்கையில் இருக்கும் இஸ்ரேலிய உளவாளிகளின் எண்ணிக்கை அரசுக்குத் தெரியவில்லை

1984 மே தொடங்கி பெப்ரவரி வரை 78 இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர். 1984 அக்டோபர் 15ம் திகதி வரை இரண்டு இஸ்ரேலியர்கள் மட்டுமே இலங்கையில் இருந்தனர். இதன் பின்னர் 25பேர் உல்லாசப் பயணிகளாகவும் ஏனையோர் உத்தியோகப் பூர்வகாரணங்களுக்காகவும், வியாபாரரீதியிலும், அபிவிருத்தித் திட்ட ஆலோசகர்களாகவும், புலன் ஆய்வில் பொலிசாரைப் பயிற்றுவிப்பவர்களாகவும் இங்கு வந்துள்ளனர். இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவில் உள்ள எவருமே இராஜதந்திரிகளுக்கான விசாவில் இலங்கை வரவில்லை. இவர்கள் அமெரிக்கத் தூதரகத்தினூடாக இங்கு வந்தவர்களாவர். இவ்வாறு வந்தோர் விவரம் தமக்குத் தெரியாது என சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது.

□

## மலையகமக்களுக்கு பிரஜா உரிமைகள் வழங்க அரசு முன்வந்தால் கடுமையாக எதிர்ப்போம்

### அஸ்கிரிய பீடாதிபதி தகவல்

98,000 மலையகமக்களுக்கு பிரஜா உரிமை வழங்குவதை கடுமையாக எதிர்க்கின்ருேம். இவ்வாறு வழங்குவதனல் இவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 470,000 பேருக்கு பிரஜா உரிமை வழங்கவேண்டி வரும். இந்த நடவடிக்கை பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் உரிமைகள் குறைவதற்கு வழி வகுக்கின்றது. மலையக மக்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்க முற்படுவது சிங்கள இனத்துக்கு அரசு செய்யும் துரோகம் எனவும் கண்டி அஸ்கிரிய பீடாதிபதி சிறீரந்தானந்த மாநாயக்கதேரோ எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அரசு இக்கோரிக்கையை நிறைவேற்ற முன் வந்தால் அதனை எதிர்த்துக் குரல் கொடுக்க முழுச்சிங்கள இனமும் பின் நிற்காது எனவும் கூறியுள்ளார்.

□

## கட்டுநாயக்காவில் குண்டு வெடிப்பு: நான்கு புகையிரதப் பெட்டிகள் சேதம்!

ஸ்ரீலங்காவிற்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தாட்சரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக கடந்த ஏப்ரல் மாதம் 10ம் திகதியன்று கட்டு நாயக்கா விமான நிலையத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில் குண்டு வெடிப்பு மேற்கொள்ளப்பட்டது. இதனல் நான்கு புகையிரதப் பெட்டிகளும் புகையிரத நிலையமும் முற்ருகச் சேதமாக்கப்பட்டது. இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தாட்சரின் வருகைக்கு காட்டும் எதிர்ப்பாகவும் மனேரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் நடாத்தப்பட்டது.

□

## யாழ். பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகளின் 3 மணி நேர 'ரொக்கற்' தாக்குதல்

யாழ் பொலிஸ் நிலையம், உதவிப் பொலிஸ் அதிபர் அலுவலகம் என்பன மீது தமிழீழ விடுதலைப் புலியினர் கடந்த ஏப்ரல் 10ம் திகதியன்று தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலின் போது பல பொலிஸார் கொல்லப்பட்டதாகவும், சிறைபிடிக்கப்பட்டதாகவும், பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர். இத்தாக்குதல்கள் பல மணி நேரம் தொடர்ந்துள்ளதுடன் நவீனரக ஆயுதங்கள் சில இங்கு உபயோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

□

## "மலையக மக்கள் ஏமாளிகளல்ல"

மலையகத் தலைவர்கள் தம்மை வளர்த்து ஆளாக்கிய மக்களை மறந்து விடக் கூடாது. நாட்டின் பொருளாதாரத்தில் அறுபத்தைந்து வீதத்தை தேடித்தரும் பத்து வீதமான இம் மக்களின் உழைப்பு இந்நாட்டிற்கு அவசியமாயுள்ளது. ஆனல் இம்மக்களுக்கோ பிரஜா உரிமையில்லை. கல்விச், செல்வம், குடியிருக்க வீடுகள் இல்லை. சில இடங்களில் புதை இடுகாடுகள் கூட இல்லை. இவ்வாருன இழிநிலைக்கு இம்மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். மலையக மக்களை ஏமாளிகள் என்று நினைக்கக் கூடாது. இவ்வாறு தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பன்வினை தொழிலுறவு அதிகாரி டி. கே. பிள்ளை மாவட்டத் தலைவர் காளிமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கருத்து வெளியிட்டுள்ளார். இக் கூட்டத்தில் மாதர் சங்கத் தலைவி முத்துலட்சுமி, கே. சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றியுள்ளனர்.

□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாவரும் கேளிரென...

இந்தச் சேனை சக்தி மிக்கது. ஏனெனில இதன் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரு உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டைக் கொண்டவர்கள். அவர்கள் ஒரு சில நபர்களினதோ, ஒரு குறுகிய கும்பலினதோ, தனிப்பட்ட நலன்களுக்காக அல்லாமல் பரந்துபட்ட வெகு மக்களினதும், முழு நாட்டினதும் நலன்களுக்காக ஒன்று சேர்ந்துள்ளனர். போர் செய்கினறனர்.

வர்த்தகர்கள் கடத்தப்பட்டதைக் கண்டித்து கதவடைப்பு, பாடசாலைகளில் உபகரணங்கள், பணம் கொள்ளையிடப்படுவதைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம், ஹர்த்தால், கோயில் கொள்ளைகளைக் கண்டித்து கண்டனப் பிரசுரங்கள். பொது சன சேவையினை மையமாகக் கொண்ட கூட்டுறவு நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பொதுநிறுவனக் கொள்ளைகளைக் கண்டித்து மக்கள் விசனம். இவ்வாறாக பல செய்திகள் அண்மையில் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. எழுபதுகளில் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து மக்களின் எதிர்ப்பு உணர்வின் வடிவமாக வெளிக்காட்டப்பட்ட கதவடைப்பு, ஹர்த்தால், ஆர்ப்பாட்ட ஊர்வலம், பகிஷ்கரிப்பு, வேலை நிறுத்தம் போன்ற நிகழ்ச்சிகள் இன்று இயக்கங்களின் அதாவது 'இயக்கப்பொடியள்' எனப்படுவோரின் தன்னிச்சையான செயற்பாடுகளைக் கண்டித்து வெளிப்படுத்தப்படுவது ஒரு ஆரோக்கியமான நிலைமையல்ல. பொறுப்பற்ற சில போராளிகளின் நடவடிக்கைகளால் இயக்கமும், அதற்கு ஊடாக இயக்கம் முன்னெடுத்துச் செல்லும் இலட்சியமும் பாதிக்கப்படுவதனை அனுமதித்தல் முடியாது என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்வர். இத்தகைய பொறுப்பற்ற சிலரைத் தீர்த்துக் கட்டுவதாலோ அல்லது அவர்களை தனிமைப்படுத்துவதாலோ மட்டும் இந்தப் போக்குகளைத் தடுத்து நிறுத்துதல் சாத்தியமற்றதொன்றாகும். போராளிகளின் அரசியல் தரத்தை, அறிவு மட்டத்தை உயர்த்துவதன் மூலமே இப்போக்குகளைத் தவிர்க்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

### யார் போராளிகள்

ஒரு தனிமனிதன் எப்போது புரட்சிவாதியாக அல்லது போராளியாக புனர் நிர்மாணம் பெறுகிறான்? இந்தக் கேள்விகளுக்கு விடை காணுவது என்பது துரதிர்ஷ்டவசமாக அவ்வளவு இலகுவானது அல்ல. ஆனால் இன்று பெரும்பாலோரும் இது குறித்து என்ன கருதுகிறார்கள்? ஏதோ ஒரு இயக்கத்தின் அங்கத்துவ விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துவிட்டால், அல்லது ஒரு சில காலம் ஊரிலிருந்தோ அல்லது நாட்டிலிருந்தோ தலைமறைவாகி விட்டால், அல்லது இயக்க உறுப்பினர்களோடு நெருங்கிய நட்புறவைப் பேணி விட்டால் போதும், நாமும் போராளிகளாகி விட்டோம் என எண்ணுகிறார்கள், இத்தகைய எண்ணத்தின் அடிப்படையில் தமது நாளாந்த நடவடிக்கைகளில் பேணும் சுயவிளம்பரம், தன்னிச்சையான போக்கு என்பன இயக்கத்திற்கு கேடு பயப்பதாகவும், ஊறு விளைவிப்பதாகவும் அமைந்து விடுகிறது.

இதே வேளையில் மக்கள் மட்டத்தில் போராளிகள் பற்றி நிலவும் தவறான கருத்தோட்டங்களையும் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். போராளிகள் என்றால் மாதக் கணக்காக ''அன்னம் தண்ணி'' இல்லாமல் அவஸ்தைப்படுபவர்கள் என்றும், தலைமறைவாகிக் காட்டுக்குள்ளே வாசம் செய்பவர்களென்றும், சதாநேரமும் ராணுவமோ, பொலிசோ பின்தொடர கருவிகளை காவித்திரியும் பிறவிகள் என்றும் எண்ணுகிறார்கள். அத்துடன் இப்படித் திரியும் இந்தக் கூட்டங்கள் எமது விடுதலையைப் பெற்றுத் தந்துவிடும் என்ற அசட்டு நம்பிக்கையோடு தமது பங்களிப்பை மறந்தவராக அவ்வப்போது யாரேனும் கேட்கும் சிறு சிறு உதவிகளை மட்டும் நிறைவேற்றுவதோடு தமது கடமை முடிந்ததென கருதுகிறார்கள். தாங்கள் யாருக்காக, என்ன காரணத்துக்காக இதனைச் செய்கிறோம்? என்ற எண்ணமில்லாமலே தங்களது உதவியின்மூலம் எத்தகைய சக்திகள் வளர்கின்றது என்ற கருத்தில்லாமலே எங்களுக்கென்ன எல்லோரும் ஒன்றுதானே, ஏதோ எங்களால் முடிந்ததைச் செய்யிறம் என்ற பீடிகையுடனான செயற்பாடுகள் விடுதலையின்பால் மக்களுக் கிருக்கும் அசிரத்தையைக் காட்டுவதாகும்.

மற்றொரு புறத்தில் இயக்கப் போராளிகளென மகுடமிட்ட சிலரும் இதைமட்டுமே மக்களின் மகத்தான பங்களிப்பு எனக் கருதுகிறார்கள். அதாவது போராளிகளின் செயற்பாடுகளுக்கு உதவுதல் மட்டுமே மக்களின் கடன் எனச் சிந்திக்கின்றார்கள். அவ்வாறு போராளிகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க மறுத்தால், அல்லது அவர்களையும் அவர்களது அவசரத்தையும் உணர முற்படாவிட்டால் எச்சரிக்கையும், ஏன் துப்பாக்கிப் பிரயோகம் கூட நிகழ்ந்துவிடுகிறது. உதாரணமாக போராளிகளுக்கு வாகனங்கள் மிக தேவையான ஒன்றுதான். ஆனால் இதைமட்டும் கருதி தெருவில் போகும் வாகனம் அனைத்தும் தமது தேவைகளுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பது எப்படி நியாயமாகும்? இன்றுள்ள நெருக்கடி நிலையில் மிக மிக முக்கிய தேவையுள்ளவர்களே பெருப்பாலும் தனியார் வாகனங்களைப் பாவிக்கின்றனர். இடைநடுவில் அதனை வழிமறித்து எமது அவசரத்தை மட்டுமே கருதி '' உஸ்! இறங்கு கீழே, எடுதிறப்பு '' என்றவாறு செயல்படுதல் இராணுவத்திற்கு பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் விடுதலைப் போராளிக்கல்ல.

### இன்றைக்குக் காணப்படும் முரண்பாடுகள்

இன்றைய சூழலில் மக்கள் மட்டத்தில் பல்வேறு விதமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. நடைமுறையில் காணப்படும் இம்முரண்பாடுகளின் மோதலும் வளர்ச்சியுமே நிலைமைகளைச் சிக்கலாக்குவதில் பிரதான பங்கை வகிக்கின்றன. முதலில் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் ; அரசின் கொடூரமான சட்டங்களாலும், இராணுவ அடாவடித்தனங்களாலும் எமது மக்கள் நிம்மதியையும் நம்பிக்கையையும் இழந் துள்ளனர். இந்த வகையில் அரசையும் அதன் இயந்திரங்களையும் தூக்கியெறிய விரும்பும் ஆர்வம் கொண்டு அதில் ஏற்படும் இழப்புக்கள், பாதிப்புக்கள் நாளைய விடுதலைக்கான-விடியலுக்கான உரங்கள் என எண்ணுகின்றனர். இதனால் இயக்கங்கள் அரசைத் தாக்கும் போது மகிழ்ச்சியடைபவர்களாகவும், உற்சாகம் பெறுபவர்களாகவும் உள்ளனர்.

அடுத்து மக்களின் விமோசனத்திற்காக, விடுதலைக்காக உழைக்க புறப்பட்டு பலவாக பிளவுபட்டுப்போன இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகள். போராட்டத் தந்திரங்கள், ஆட்சேர்ப்பு முறைகள், முன் வைக்கும் கருத்துக்கள் நடைமுறைப் பிரச்சனைகள் என்பன போன்ற காரணிகளில் மையம் கொள்ளுகின்றது. இதனையொட்டிய அணுகும் முறைகளில் ஏற்படும் வேறுபாடுகள் இப்பிளவுகளை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் வருவதனால் இயக்க நலன்களையும் குழு நலன்களையும் முன்னிட்டு செயற்பட இயக்கங்களை தூண்டுவதாயுள்ளது. மூன்றாவதாக இயக்கங்களில் காணப்படும் முரண்பாடுகள், இது தனி மனித குரோதங்கள், கசப்புணர்வுகள், பதவிப்போட்டி, அணுகுமுறை வேறுபாடுகள் எனப் பல அம்சங்களில் தங்கியுள்ளது.

போராளிகளின் தோற்றம் என்பது அரசுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாடுகளின் பிரதிபலிப்பே. அத்துடன் அனைத்து மக்களும் நேரடியாகப் பாதிக்கப்படுவதும் ஒடுக்கப்படுவதும் அரசினாலேயே. எனவே இந்த முரண்பாடுகளை முதன்மைப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதே இன்றைய அவசியமும் தேவையுமாகும். இதற்காகப் போராளிகள் அரசியல் முதிர்ச்சியை பெறவேண்டியது அத்தியாவசியமானது. துப்பாக்கி குண்டுகள் குறிகளை (TARGETS) இலகுவாக அடைந்து விடலாம். ஆனால் குறிக்கோளை (MOTIVE) அடைவது அவ்வளவு இலகுவானதல்ல. குறிக்கோளையடைய வேண்டுமெனில் துப்பாக்கிக் குண்டுகளுக்கு வேகம் மட்டும் இருந்தால் போதாது. அதை இயக்குபவர்களுக்கு விவேகமும் இருக்கவேண்டும்.

இராணுவ வீரனைப் பொறுத்தவரை அவன் ஒழுங்கமைந்த ஒரு நிறுவனத்தில் கடமையாற்றும் ஒரு ஊழியன். ஒரு போராளி நிறுவனத்தை தானே ஒழுங்கமைக்க வேண்டியவனாகிறான். ஒரு போராளி எங்கேயோ இருந்துவரும் கட்டளைகளை நிறைவேற்றும் ஒரு கருவியல்ல. மாறாக ''மக்களிடையிலான பிரச்சனைகளைப் படித்தறிய ஆர்வமுடைய மாணவனாகவும், அந்தப் பிரச்சனைகளையே ஒழுங்குபட எடுத்துப் போதிப்பதில் நல்லாசிரியனாகவும், இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கி வழி நடத்துவதில் வழி காட்டியாகவும், இந்த வழியில் ஏற்படும் தடைகளை நீக்குவதில், முட்டுக்கட்டைகளை உடைத்தெறிவதில் முன்னணிப் படையினனாகவும், செயற்பட வேண்டியவனாகிறான்''. என்கிறார் மா ஓ....

அதாவது இராணுவத்தானைப் போல துப்பாக்கி தூக்கியவனாக இருந்தபோதும் போராளி, அவனை விட மிகவும் வேறுபட்டவனாகிறான். ஒரு இராணுவத்தான் இன்றைய அமைப்பையும், அதன் நிர்வாகத்தையும் பாதுகாப்பதற்காக கருவி தூக்கியவன். ஆனால் போராளியோ இன்றைய அமைப்பை உடைத்தெறிவதோடு, எதிர்கால நிர்மாணத்திற்காகவும் ஆயுதம் தாங்கியவன். ஆகவே போராளி என்பவன் நடைமுறையில் அழிவு ஏற்படுத்துவதைவிட எதிர்கால நிர்மாணங்கள் பற்றிய ஆக்கங்களிலேயே அதிக கவனம் செலுத்தவேண்டும். மேலும் இராணுவத்தான் தனது நடவடிக்கைகளின் பலாபலன்களை-அதன் பாதிப்புகளைப் பற்றி கிஞ்சித்தும் கவலையற்று செயலாற்றுவான். ஆனால் போராளியோ தனது செயல் பாடுகளால் ஏற்படும் பலா பலன்களுக்கு-பாதிப்புகளுக்கு விலை செலுத்தவேண்டியவனாகவும், பதில் சொல்ல வேண்டியவனாகவும் விளங்குகின்றான். அதாவது ஒரு போராளி என்பவன் மக்களை நேசித்து மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த சேவையில் ஈடுபடுபவன், மக்களுக்காக மக்களின் மேன்மைக்காக தன்னை இழக்கத் தயங்காதவன் ஆகிறான். ஆனால் இராணுவத்தானோ சம்பளத்தை நேசித்து தனது வாழ்வை மட்டும் மையமிட்டு அதற்காகக் கடமையில் ஈடுபடுபவன். ஆகவே தான்போராளிகள் எனப்படுவோர் தமது கையில் கிடைத்த கருவிகளின் துணையினால் மக்களை அதிகாரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

### போராளிகளின் கவனத்திற்கு

எனவே போராளிகள் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு செயலாற்ற வேண்டியது அவசியமானதாகும். ஒவ்வொரு தனிப்பட்ட போராளியும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அவனையும் அவன் சார்ந்த இயக்கத்தையும் மட்டுமன்றி இலட்சியத்தையும் இனத்தையும் பாதிக்கக் கூடியதாக அமைந்துவிடக்கூடும். எனவே தனிப்பட்ட கோபதாபங்கள், கசப்புணர்வுகள், போட்டி பொறாமைகள் போன்றவற்றைக் களைந்தெறிந்து பொறுப்புமிக்க நபராக தன்னைக் கட்டுபடுத்தித் தான் சார்ந்த மக்களுக்காகத் துன்பப்படவும் தயாரானவனாக, தான் சார்ந்த மக்களை வழி நடத்தும் ஆற்றல் மிக்கவனாகப் போராளி விளங்க வேண்டியவன் ஆகிறான். இதை விடுத்து தமது கையில் இருக்கும் ஆயுதத்தின் மூலமாக மக்களிடம் அதிகாரம் செலுத்துவதும், 'துப்பாக்கிக் குழலிருந்தே அரசியல்அதிகாரம் பிறக்கிறது' என்பதனைக் கொச்சைத் தனமாக மேற்கோள் காட்டுவதும் தமது தேவைகளை நிறைவு செய்வதே மக்கள் கடன் என்ற அடிப்படையில் செயற்படுவதும், இந்த அடிப்படையில் மக்களின் தேவைகள் பற்றி சிந்திக்காது செயற்படுவதும், மக்களை போராளிகளின் மீது மட்டுமன்றி இலட்சியத்தின் மீதும் ஆத்திரம் கொள்ள தூண்டிவிடும். இத்தகைய விபரீதப் போக்குகளின் வெளிப்பாடுகளே அநாவசிய வாகனக்கடத்தல்கள், ஆள் கடத்தல்கள், கொள்ளைகள், கொலைகள் போன்ற நிகழ்ச்சிகள்.

எனவே மக்களின் விடுதலைக்காகப் போராடும் நாம், ஏனைய நாடுகளில் மக்கள் போராடிப் பெற்ற அனுபவங்களைப் படிப்பினைகளாக்கி, எம்மைத் தயார் படுத்துவதே இன்றைய அவசியமாகும். மக்களுக்கும் இயக்கங்களுக்கும் இடையிலான உறவுகள், முன்னோடிகள் மத்தியிலான உறவுகள் என்பவற்றை, ஆட்சி செய்கின்ற சரியானகோட்பாடுகளைக்கண்டறிந்து நடைமுறைப் படுத்தவேண்டும். இத்தகைய கோட்பாடுகள் போராடிய மக்களின் படிப்பினைகளாகவும், பல வீரர்களின் இரத்தத்திலும் வியர்வையிலும், நனைந்தவையாகவும் உள்ளன என்பதை மறத்தல் ஆகாது. மேலும் போராளிகள் இழைக்கும் தவறுகளுக்காக இரத்தத்தையும் வியர்வையையும் மட்டுமன்றி உயிரிழப்புக்களையும் கூட சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும் ஞாபகத்தில் இருத்திக் கொள்ளவேண்டும்.

வியட்னாமிய மக்களின் விடுதலைக்காக உழைத்த ஜெனரல் கியாப் (General Giap) போராளிகளுக்கு பின் வருமாறு அறிவுரை கூறுகிறார்.

(1) மக்களுக்கு மதிப்பளியுங்கள் (2) மக்களுக்கு சேவை செய்யுங்கள்.

(3) மக்களுக்கு பாதுகாப்பு அளியுங்கள்'' (Respect the people. Serve the people and Defend the people) மக்களோடு பழகும் போது இவற்றை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதை விடுத்து தமது அவசரத்தையும் அவசியத்தையும் மட்டுமே கவனத்தில் எடுத்துப் போராளிகள் செயற்படுவது மக்களுக்கு இவர்கள் மீது வெறுப்பை வளர்க்கும்.

விடுதலைப் போராட்டம் முக்கிய கட்டத்தை அடைந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் முக்கியமான பாத்திரத்தை ஆயுதங்களே ஆற்றுகின்றன. ஆனால் ஆயுதந் தாங்கியிருக்கும் போராளிகள் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை ஆற்ற வேண்டுமானால், முற்போக்கான அரசியல் உணர்வில் ஊறிப்புடமிடப்படல் வேண்டும். முற்போக்கான அரசியல் வேலையினூடாக இத்தகைய உணர்வு வளர்க்கபட்டாக வேண்டும். இல்லாவிடில் படையின் அத்திவாரமான போராளிகளின் உற்சாகத்தை எதிர்ப்பு யுத்தத்தின் போது பூரணமாகத் தட்டியெழுப்புதல் அசாத்தியமானதாகி விடும். மேலும் ஆயுதக் கவர்ச்சியை மையமிட்ட ஆட்சேர்ப்புகள், கடந்த காலத்தில் தோற்றுவித்திருக்கும் குழப்பங்களும் கொலைகளும் எம்மவருக்கு பாடமாக அமைதல் வேண்டும்.

மேலும் இயக்கத் தோழர்களுக்கு இடையில் ஏற்படும் வேறுபாடுகள் இயக்கத்தைப் பாதிக்கும் அளவுக்கு வளருவதை அனுமதித்தல் கூடாது. வேறுபாடுகள் காணப்படும் தோழர்கள் நெருங்கி ஐக்கியமுறுவதிலும், சேர்ந்துவேலைசெய்வதிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். நாட்டின் பலவேறு கோணங்களில் இருந்தும், பல வேறுபட்ட மக்கள் தொகுதிகளிலிருந்தும் விடுதலையை அதன் முழு அர்த்தத்தில் பெற்றுக் கொள்வதற்காக ஒன்று சேர்ந்து போராடி வருகின்ற எம்மவர் தம்மைப் போலவே அதே கருத்துக்களைக் கொண்ட தோழர்களோடும் ஐக்கியமுறுவதிலும் திறமையுடையவர்களாகவும் தேர்ச்சி மிக்கவர்களாகவும் விளங்குதல் வேண்டும். அப்போதுதான்போராட்ட சக்திகள் ஒட்டுமொத்தமாக முழு மக்களினதும் நலன்களைப் பிரதிபலிக்கும் ஒரு அமைப்பாக பரிணமம் பெறமுடியும்.

இத்தகைய சக்திகளாகத் திகழும் போராளிகள் கூட்டமே ஈழப் போராட்டத்தின் திசை வழியைத் தீர்மானிக்கும். ஈழப்போராட்டத்தை புரட்சியாகப் பரிணமம் கொள்ளச் செய்யும் ''பொடியங்கள்'' என்ற பதம் போய் போராளிகளாக'' உயரவைக்கும் இளைஞர் இயக்கங்களை மக்கள் இயக்கமாக மலரவைக்கும். இன்றைய சமூக அமைப்பை உழுது புரட்டும் உழவர்களாக-எதிர்கால-சமூகத்தின் சிற்பிகளாக, புரட்சிவாதிக

www.tamilarangam.net

# பொதுமை

### செங்கலடி — கட்டுநாயக்கா — யாழ்ப்பாணம்

அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கள் நிரம்பி வழிந்தாலும் அரசாங்கத்தினதும் அதனது இராணுவத்தினதும் போக்குகள் இராணுவ தீர்வை நோக்கியே நகர்கின்றன. வெளிநாட்டு உறவுகளும், உள்நாட்டில் தொடரும் நடவடிக்கைகளும் இதை உணர வைக்கின்றன.

வெளிநாட்டு உறவு என்னும்போது ஜே. ஆரின் பாகிஸ்தான் விஜயத்தையே இங்கு முதன்மையாக குறிப்பிடுகிருேம். இம்மாத ஆரம்பத்தில் ஜே. ஆர். பாகிஸ்தான சென்று ஜியா உல்-ஹக்கை ஆரத்தழுவிக் கொண்டார். இருவரும் ஜனநாயகத்தைப் புதைத்துவிட்டு தமது உறவுகளை நெருக்கமாக விருத்தி செய்ய முனைவதில் வியப்பொன்றுமில்லை. இவ்விஜயத்தைப் பொறுத்தவரை சுருக்கமாக சொன்னல் ஜே. ஆர். தான் இராணுவ ஆட்சியை நோக்கி வீறுநடை போடுவதை உலகுக்கு உணர்த்தியுள்ளார் எனலாம்.

அடுத்து தாட்சரின் விஜயத்தை கவனிப்போம். தமிழ்பேசும் மக்களினதும், பல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்ளகதும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் வந்திறங்கிய தாட்சரின் பேச்சுகள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சி இருக்கிறது. உலகில் மனித உரிமையை அப்பட்டமாகவே முன்னின்று மீறும் அரசான இலங்கை அரசை போற்றிப் புகழ்ந்து, தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதமாக்கி விட்டு போய் விட்டார் தாட்சர். ஜனநாயகத்தின் ‘தாய்நாட்டின்’ பிரதமரான இவர் போகும்போது ஜே. ஆர் செய்தவற்றை உற்சாகப்படுத்தியதோடு 2 கோடி பவுண் ரொக்கப்பரிசையும் வழங்கிச் சென்ருர்.

வெளிநாட்டுறவுகள் இவ்விதமிருக்க, உள்நாட்டில் சமீபகாலமாக நடந்து கொண்டிருப்பவை மேலும் ஆபத்தை தெரிவிக்கின்றன. அத்துலத் முதலியின் கொக்கிளாய் முகாமுக்கான திடீர் விஜயமும், சேருவாவிலையில் களவாகக் குடியேற்றப்பட்ட சிங்கள குடும்பங்களும். கங்குவேலியில் தமிழருக்காக கட்டப்பட்ட 25 வீடுகளை சிங்களவருக்கு வழங்க எடுக்கும் முயற்சியும் மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் அதிரடிப் படையினர் செய்யும் அக்கிரமங்களும் வடபகுதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நவீன ஆயுதங்களும, கவச வாகனங்களும் விமானங்களும் ஆபத்தின் அறிகுறிகளே.

வடபகுதியை இராணுவத்தைக்கொண்டும், திருகோணமலையை சிங்கள குண்டர்களினதும் இராணுவத்தினதும் கூட்டு வன்முறையைக் கொண்டும், மட்டக்களப்பை அதிரடிப்படையினரின் அடாவடித் தனங்களைக் கொண்டும் ‘பாதுகாக்க’ கங்கணங்கட்டுகிறது அரசு.

இத்தருணத்தில் மக்கள் மனதில் தோன்றியுள்ள அச்சத்தைப் போக்கி எதிர்காலத்தில் போராட்ட சூழ்நிலையை உருவாக்கக்கூடிய வகையில், இயக்கத்தின் இராணுவநடவடிக்கைகள் அமைய வேண்டியது அவசியம். இதற்கான இலக்குகள். இருவகைகளில் தெரிவு செய்யப்படுகிறது. ஒன்று போராட்ட முன்னெடுப்பிற்கேற்ற மூல உபாயத்திற்குள் (Strategy) அடங்கும் இலக்குகள். இவை பொருளாதாரத்தை பலவீனமாக்கும் இலக்குகளாயும், அரசை பீதியடைய வைக்கும் இலக்குகளாயும் இப்போது வெளிக்காட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது இடைக்கால சூழ்நிலைமைக்கேற்ற நடவடிக்கைகள். இவை போராட்டத்துக்குரிய மூல உபாயத்தை குழப்பாத வகையில் தற்காலிகமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும். மக்கள் மோசமாக பாதிக்கப்படும்போது அதிலிருந்து தற்காலிகமாக நிவாரணம் பெறவும் தமது எதிர்ப்புணர்வுக்கு இராணுவ வடிவம் கொடுக்க விரும்பும்போது இவ்வகை தாக்குதல்கள் நடைமுறைக்கு வரும்.

மட்டக்களப்பில் சிலகாலமாக அதிரடிப்பொலிசார் செய்து வந்த கற்பழிப்புகளுக்கும் மர்மக் கொலைகளுக்கும் இம்சைகளுக்கும் பதிலடி கொடுத்து தற்காலிகமாக இடை நிறுத்த வேண்டியகட்டாயம் நிலவிவந்தது. அதுமட்டுமல்லாமல் போராளிகளின் முகாம்களை தாம் இலகுவில் வெற்றி கொள்ள முடியுமென்ற இறுமாப்பும் அதிரடிப்படையினரிடமும் இருந்து வந்தது. இவற்றை முறியடிக்கும் பாங்கில் அமைந்த முதல் தாக்குதலில் 3-ந் திகதி செங்கலடி தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

அடுத்து தாட்சரின் வருகைக்கு எதிர்ப்புக் காட்டுவதற்காக கொழும்பில் ஏதும் நடக்காதா என்று பலரும் எதிர்பார்த்திருந்த நேரத்திலேயே கட்டுநாயக்காவில் குண்டு வெடித்து பலத்த சேதத்தை கொடுத்திருந்தது. இது தமிழ் பேசும் மக்களின் மனக் குமுறலை உலக அரங்கிற்கு சுட்டிக்காட்டும் குறியீடாக அமைந்திருந்தது.

இவற்றுடன் கூடவே, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தரைமட்டமாக்கப்பட்டதுடன் அகழிவெட்டி, கம்பிகட்டி காத்திருந்த இராணுவ பொலிஸ் படையினருக்கு விடுதலைப் புலிகளின் யாழ் பொலிஸ் நிலைய தாக்குதல் மனமுறிவைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமெதுவுமில்லை.

குறுகிய காலத்துள் தொடராகவும் பரவலாகவும் நடக்கும் தாக்குதல்கள் அரசை திக்குமுக்காடச் செய்யுமென்பது திண்ணம். கடந்த வாரங்களில் நடந்தேறிய இம்மூன்று தாக்குதல்களும் கூட்டமைப்பிலுள்ள இயக்கங்களின் எதிர்கால திட்டங்களுக்கு ஓர் அனுபவமாக அமையப்போவது நிச்சயம்.

# ஈழம்

## ஈழத்தமிழர் கண்மூடித்தனமாக படுகொலை செய்யப்படுவதை ஜெனிவா மனித உரிமைகள் மகாநாட்டில் அணிசேரா நாடுகள் எதிர்த்தன

தமிழ் தீவிரவாதிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரில் கண்மூடித்தனமாக அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு, ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்ட பல அணிசேரா நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இந்திய, அவுஸ்திரேலிய, சுவிட்சர்லாந்து பிரதிநிதிகள் வட்ட மேசை மகாநாடு தோல்வியில் முடிந்ததையிட்டு கவலை தெரிவித்தனர். தமிழர் பிரச்சனைகளை சமரசமாகத் தீர்த்துவைக்க சிறீலங்கா அரசு தவறிவிட்டது என இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜி. எஸ். தில்லான கூறினர்.

பலஸ்தீனியரின் பாரம்பரிய பூமி ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதுபோல், தமிழர்களின் பாரம்பரிய பூமி ஆக்கிரமிக்கப்படுகின்றது எனவும், வண பிதா பஸ்ரியாவின் படுகொலையைக் கண்டித்தும் சர்வதேச கத்தோலிக்கர் சங்கப் பிரதிநிதி கருத்து வெளியிட்டார். சர்வதேச ஜுரர்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி பேசுகையில் 1984 ஆகஸ்டுக்கும் டிசம்பருக்கும் இடையே, இலங்கையில் நடந்துள்ள 74 மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் குறித்து, 108 சத்தியகடதாசிகள் சர்வதேச ஜுரர்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன எனக் கூறினர்.

### *தமிழ் பகுதிகளில் சிங்கள குடியேற்றமா?*

## இது நிலைமைகளை மோசமாக்கும்

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவது தமிழர்களின் மனநிலையை மேலும் கடினமாக்குவதுடன் பெரிய அளவிலான வன்முறைச் செயல்களுக்கு இட்டுச் செல்லும். இலங்கையில் எழுந்துள்ள பிரச்சினை, அரசியல் தீர்வின் மூலமே தீர்க்கப்பட வேண்டும்; இதனையே அமெரிக்கா விரும்புகிறது என அமெரிக்கப் பிரதிதுணைச்செயலாளர் ரேபட் பெக் தென்கிழக்காசிய விவகாரங்கள் தொடர்பான காங்கிரசின் உபகுழு கூட்டத்தில் உரையாற்றியபோது குறிப்பிட்டார். வடகிழக்கில் சிங்களவர்களை ஆயுதபாணிகளாக்கும் அரசின் நடவடிக்கைகளை இவர் கண்டித்துள்ளார். இலங்கையின் பாதுகாப்புச் செலவினங்கள் அதிகரித்துள்ளதனல் பொருளாதாரம் சீர்கெட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய இவர், இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதில் இந்தியா பெரும் பங்காற்ற முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### *இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு ஆதரவாக தமிழகத்தில்*

## கண்டன ஊர்வலங்கள், உண்ணுவிரதங்கள்

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து 150, வழக்கறிஞர்கள் சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். இது தொடர்பான மகஜர் ஒன்றையும் இலங்கை துணைஸ்தானிகர் அலுவலகத்தில் சமர்ப்பித்தனர். மாணவர்களால் கல்லூரித் தேர்வுகளும் பகிஷ்கரிக்கப்பட்டன.

தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த, இந்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோயம்புத்தூர் எஞ்சினீயர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் சங்கத்தின் 8-வது மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருச்சியில் வக்கீல்கள் சங்கம் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்து ஊர்வலம் நடத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் மீதான வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும் எனக்கோரி இராமேஸ்வரம், மதுரை, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ஒருநாள் உண்ணுவிரதம் நடைபெற்றது.

மீனவ இளைஞர்களும், சமத்துவ சமுதாய இயக்கத்தினரும் இதனை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

### *தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டு நாம் கண்ணை மூடிக்கொண்டு இருக்கமுடியாது :*

## கர்நாடக முதல்வர் கண்டனம்

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைப் பார்த்துக்கொண்டு நாம் கண்களை மூடிக்கொண்டு இருக்க முடியாது; இலங்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக தென்னிந்திய மாநில முதலமைச்சர்களின் மகாநாடு ஒன்றினை நடத்துமாறு கர்நாடக முதல்வர் இராமகிருஷ்ண ஹெக்டே, ராஜீவ் காந்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை பாரதம் முழுவதற்குமான பிரச்சனை என கர்நாடக முதல்வர் கூறியுள்ளார். ஈழத் தமிழர் உயிர், உடமை, உரிமைகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனதா கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ள நியூசிலாந்துப் பிரதமர் திரு. டேவிற் லாணிஸ் இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு கூடிய விரைவில் அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டுமென நியூசிலாந்து அறிவித்துள்ளது.

## இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து டில்லியில் கண்டன ஊர்வலம்

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, புதுடில்லியில் 27-03-85 அன்று பெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இதில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். இந்த ஊர்வலம் புதுடில்லி ரீகல் இடத்திலிருந்து போட்கிளப் வரை நடைபெற்றது. சென்னை சட்டமன்ற உறுப்பினர் குமரி அனந்தன், டி. ஆர். பி. ஜனர்த்தனம், தமிழ் அறிஞர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதன், புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு அரசின் விசேட தூதுவர் திரு. ஜி. ஆர். எட்மன்ட், மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர், திரு. திண்டிவனம் ராமமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு உடனடி தீர்வு தேவை; அவர்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்றும் ஊர்வலத்தில் கோஷித்தனர். இலங்கைப் பிரச்சனை தொடர்பாக, இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டுமெனக்கோரி ராஜீவ் காந்தியிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

## கூட்டமைப்புடன் தமிழீழ விடுதலைப்புலிகள் இணைந்தது

ஈழப்போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் நான்கு விடுதலை இயக்கங்கள் இணைந்து செயற்பட இணங்கியுள்ளன. இதற்கான உத்தியோக பூர்வமான அறிவிப்பு 10-4-85ல் சென்னையில் வெளியிடப்பட்டது.

கடந்த மே மாதம் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப்புரட்சி அமைப்பு (EROS), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) என்பன இணைந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணியை (ENLF) அமைத்து இருந்தன. இவ்வமைப்புடன் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் (LTTE) இணைந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்